# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,579 — 1965 දෙසැම්බර් 7 වැනි අඟහරුවාදා — 1965.12.7

14,579 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 7 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல : J/2/65. உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

1950 ம் ஆண்டின் 29ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டு சட்டத்தின் 4ம் பிரிவை அச்சட்டத்தின் 3(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யாழ்ப்பாண மாவட்டம், சண்முகம் பரமநாதன் ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) 1962 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19 ம் திகதி வெளிவந்த 13,397 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஜே/45/62 ம் இலக்க விலைக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1 ம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடுதலான மொத்த விலையோடும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கும் ஆகக் கூடிய சில்லறை விலையோடும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1ம் அட்டவணையில் 2ம், 3ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக் கூடிய மொத்த விலையாகவும் சில்லறை வியாபாரி ஒருவர் பாவனையாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். 1ம் அட்டவணையின் 1ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகரசபை எல்லை உட்பட) விற்கலாகாதென விதிக்கிறேன்.

(3) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1ம் அட்டவணையின் 1ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடுதலான மொத்த விலையோடும் நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையோடும், இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1ம், 2ம் அட்டவணைகளில் 2ம், 3ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக்கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். 1ம் அட்டவணையில் 1ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருளை இந்த விலைகளுக்கு கூடுதலாக 2ம் அட்டவணையின் 1ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் விற்கலாகாதென விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) முதலாம் அட்டவணையின் 1ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களைத் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரையோ அதற்குக் கூடுதலான தொகையையோ ஒரே முறையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) முதலாம் அட்டவணையின் 1ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள எத்தொகையான பொருட்களையும், ஒரு மொத்த அந்தருக்குக் குறைவான தொகையில் உபயோகத்திற்கு அல்லது பாவனைக்காக விற்றல் சில்லறை விலையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எவரொருவராவது முதலாம் அட்டவணையின் முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களை வேறொரு பொருளுடன் சேர்த்து விற்றல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் முதலாம் அட்டவணையின் முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் பொருட்களுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்று ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் எழுதி பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாக கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், 1ம் அட்டவணையின் 1ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் தொகை (நிறையில்) ;
(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலையும் ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா, அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) இக்கட்டளையின் 1ம் அட்டவணையின் 1ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை விற்குமிடத்து 1ம் 2ம் அட்டவணைகளின் 2ம் 3ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 2 ந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணச் செயலகத்தில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, யாழ்ப்பாண மாவட்டம்.

### முதலாம் அட்டவணை (பகுதி) 1

| | 1 ம் பந்தி விபரம் | 2 ம் பந்தி<br>மொத்த அந்தர் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் சபை எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக் கூடுதலான மொத்த விலையுடன் கூட்டவேண்டிய தொகை (யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் யாழ்ப்பாண நகரசபை உட்பட)<br>ரூ. ச. | 3 ம் பந்தி<br>நிகர இருத்தல் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் சபை எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய தொகை (யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் யாழ்ப்பாண நகரசபை உட்பட)<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | வெங்காயம் (சிக்பலபூர் சிறுவெங்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) | 2 92 | 0 3 |
| 2. | உருளைக்கிழங்கு | 2 92 | 0 3 |
| 3. | கொத்தமல்லி | 3 92 | 0 4 |
| 4. | முழுஉழுந்து | 3 92 | 0 4 |
| 5. | பாசிப்பயறு | 3 92 | 0 4 |
| 6. | துவரம்பருப்பு | 3 92 | 0 4 |
| 7. | கடலைப்பருப்பு | 3 92 | 0 4 |
| 8. | புளி | 3 92 | 0 4 |
| 9. | நற்சீரகம் | 3 92 | 0 4 |
| 10. | மஞ்சள் | 3 92 | 0 4 |
| 11. | உள்ளி (பம்பாய்) | 3 92 | 0 4 |
| 12. | மிளகாய் | 3 92 | 0 4 |

### இரண்டாம் அட்டவணை

| | 1 ம் பந்தி<br>இடப்பரப்பு | 2 ம் பந்தி<br>யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகரசபை உட்பட) மொத்த வியாபாரியின் அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விலையுடன் கூட்ட வேண்டிய தொகை<br>ரூ. ச. | 3 ம் பந்தி<br>யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகரசபை உட்பட) நிகர இருத்தல் ஒன்றுக்கு சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய தொகை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | வடமராட்சி காரியாதிகாரியின் எல்லைகள் | 0 45 | 0 0 |
| 2. | வலிகாமம் மேற்கு காரியாதிகாரியின் எல்லைகள் | 0 35 | 0 0 |
| 3. | வலிகாமம் வடக்கு காரியாதிகாரியின் எல்லைகள் | 0 25 | 0 0 |
| 4. | வலிகாமம் கிழக்கு காரியாதிகாரியின் எல்லைகள் | 0 25 | 0 0 |
| 5. | நெடுந்தீவு காரியாதிகாரியின் எல்லைகள் | 1 67 | 0 2 |
| 6. | தீவுப்பகுதியின் காரியாதிகாரியின் எல்லைகள் (நயினைதீவு, அனலைதீவு, எழுவைதீவு கிராமசபை எல்லைகள் தவிர்ந்த) | 0 45 | 0 0 |
| 7. | தீவுப்பகுதியின் காரியாதிகாரியின் எல்லைக்குள் உள்ள நயினைதீவு, எழுவைதீவு, அனலைதீவு கிராமசபை எல்லைகள் | 0 91 | 0 1 |
| 8. | தென்மராட்சி காரியாதிகாரியின் எல்லைகள் | 0 37 | 0 0 |
| 9. | பச்சிலைப்பள்ளி காரியாதிகாரியின் எல்லைகள் | 0 54 | 0 1 |
| 10. | கிளிநொச்சி காரியாதிகாரியின் எல்லைகள் | 0 67 | 0 1 |
| 11. | துணுக்காய் காரியாதிகாரியின் எல்லைகள் | 1 9 | 0 1 |
| 12. | பூனகரி காரியாதிகாரியின் எல்லைகள் | 0 74 | 0 1 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக் கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலே இப்பொருட்களை விற்கலாகாது.

12–587

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.